## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1. நிதிகளின் பயன்பாடு

மீளாய்வு காலப்பகுதியின் போதான நிதியளிப்பு மற்றும் நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2014 இன் காலப்பகுதியின் போது பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 75 | 9,670 | 0.797 | 103.62 |
| இலங்கை அரசாங்கம் | 25 | 3,223 | 0.009 | 1.28 |
| | 100 | 12,893 | 0.806 | 104.90 |

மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டில் செய்யப்பட்ட ரூபா 2,584 மில்லியன் தொகையான ஒதுக்கீடு பாதீட்டு மதிப்பீட்டின் ஏனைய பொருள் குறியீட்டிற்கு பின்னர் மாற்றப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

மொறட்டுவ – பிலியந்தலை வீதி மற்றும் இரத்மலானை – மிரிகம வீதி என்பவற்றின் புனரமைப்பிற்கான ஒப்பந்தம் 2014 நவம்பர் 28 இல் ரூபா 1,322,154,228 மதிப்பிடப்பட்ட கிரயத்தில் தனியொரு பொதியாக வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் எந்தவொரு பௌதீக முன்னேற்றமும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

செயற்திட்டமானது மொறட்டுவ – பிலியந்தலை வீதி மற்றும் இரத்மலானை – மிரிகம வீதி என்பவற்றின் புனரமைப்புகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரர்களிற்கு ரூபா 99,161,569 கூட்டு மொத்தத் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்களை விடுவித்திருந்த போதிலும் ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளின் 8.3 மற்றும் 14.4 ஆம் உட்பிரிவுகளின் பிரகாரம் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப அறிக்கைகள், முறை மற்றும் காசுப் பாய்ச்சல் மதிப்பீடுகள் என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.